வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்- மலர்விழி

தேதி-13.6.2024 நேரம் மாலை 6.10 மணி

---

தலைப்புச் செய்திகள்

- அடுத்து 5 ஆண்டுகளில் நாட்டின் பாதுகாப்பு ஏற்றுமதியை, 50 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தும் இலக்குடன், அரசு செயல்படுவதாக, பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் தெரிவித்துள்ளார்.
- நீட்-யுஜி தேர்வில், கருணை மதிப்பெண் அல்லது இழப்பீட்டு மதிப்பெண் வழங்கப் பெற்ற மாணவர்களுக்கு, வரும் 23-ஆம் தேதி, மறுதேர்வு நடத்தப்பட உள்ளது.
- துபாய் நாட்டில், அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட பயங்கர தீவிபத்தில் 41 இந்தியர்கள் பலியானது குறித்து, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன் துயரம் வெளியிட்டுள்ளார்.
- புதுச்சேரியில், உயர் ரக நெல், பாரம்பரிய நெல் சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு வேளாண் துறை மூலம் உதவித் தொகை வழங்கும் பணிகளை இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார்.

ராஜ்நாத்

பாதுகாப்பு அமைச்சர் திரு ராஜ்நாத் சிங் இன்று புதுடெல்லியில், அமைச்சகத்தின் அலுவல் பொறுப்பை முறைப்படி ஏற்றுக் கொண்டார். வலுவான சுயசார்பு இந்தியா ஒன்றை உருவாக்க அரசு விரும்புவதாகவும், நாட்டின் பாதுகாப்பு, மற்றும், பாதுகாப்பு படையினரின் நலன்களுக்கு தமது முன்னுரிமை தொடரும் என்றும் அவர் கூறினார். அடுத்து 5 ஆண்டுகளில் நாட்டின் பாதுகாப்பு ஏற்றுமதியை 50 ஆயிரம் கோடி ரூபாயாக உயர்த்தும் இலக்குடன் அரசு செயல்படுவதாகவும் அவர் தெரிவித்தார். தொடர்ந்து பாதுகாப்பு அமைச்சகத்தின் முதல் 100 நாள் செயல் திட்டம் குறித்து, அமைச்சக அதிகாரிகளுடன் திரு ராஜ்நாத் சிங் ஆய்வுக் கூட்டம் நடத்தினார். முன்னாள் ராணுவத்தினரின் நலன் தொடர்பான பிரச்சனைகள் குறித்து இக்கூட்டத்தில் முக்கிய கவனம் செலுத்தப்பட்டது. போர்த் தந்திர ரீதியில், இந்திய பெருங்கடல் பகுதியின் முக்கியத் துவம் அதிகரித்து வருவதைக் கருத்தில் கொண்டு, புதிய பதவிக் காலத்தின்

முதல் பயணமாக, விசாகப் பட்டிணத்தில் உள்ள கிழக்கு மண்டல கடற்படை தலைமையகத்திற்குச் செல்லவும் பாதுகாப்பு அமைச்சர் முடிவு செய்துள்ளார்.

***<u>பட்ஜெட் தயாரிப்பு</u>***

நடப்பு நிதியாண்டிற்கான முழு பட்ஜெட்டை தயாரிக்கும் நடைமுறைகள் இன்று தொடங்கி உள்ளன. மத்திய நிதியமைச்சர் திருமதி நிர்மலா சீதாராமன் நேற்று அலுவல் பொறுப்பை ஏற்றவுடன் அதிகாரிகளுடன் இதுகுறித்து ஆலோசனைக் கூட்டம் ஒன்றை நடத்தினார்.

***<u>மாண்டவியா</u>***

மத்திய இளைஞர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டுத் துறை அமைச்சர் டாக்டர் மன்சுக் மாண்டவியா, நடப்பாண்டு பாரீஸ் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொள்ளும் இந்திய குழுவினருக்கான ஏற்பாடுகள் குறித்து இன்று புதுடெல்லியில், இந்திய ஒலிம்பிக் சங்க அதிகாரிகளுடன் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். இணை அமைச்சர் திரு ரக்ஷா கட்சே, மற்றும், அமைச்சகத்தின் மூத்த அதிகாரிகளும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். இந்திய ஒலிம்பிக் சங்கத்தின் தலைவர் திரு பி டி உஷா பின்னர் செய்தியாளர்களிடம் பேசுகையில் விளையாட்டு வீரர்களுக்கு முன்னுரிமை கொடுத்து எல்லா ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளதாக தெரிவித்தார். டோக்கியோ ஒலிம்பிக் போட்டிகளைக் காட்டிலும் இம்முறை இந்தியாவிற்கு அதிக பதக்கங்கள் கிடைக்கும் என இந்திய ஒலிம்பிக் சங்கம் எதிர்பார்ப்பதாக அவர் மேலும் கூறினார்.

***<u>நீட்</u>***

நீட்-யுஜி தேர்வில், கருணை மதிப்பெண் அல்லது இழப்பீட்டு மதிப்பெண் வழங்கப் பெற்ற, ஆயிரத்து 563 மாணவர்களுக்கு, வரும் 23-ஆம் தேதி மறுதேர்வு நடத்தப்பட உள்ளது. இவர்கள் அனைவருக்கும் மின்னஞ்சல் மூலம் இதுகுறித்து அதிகாரப் பூர்வ தகவல் அனுப்பப்படும் என்று, தேசிய தேர்வு முகமை இன்று வெளியிட்டுள்ள அறிவிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது. முகமையால் அமைக்கப்பட்ட உயர் அதிகாரக் குழுவின் அறிக்கை குறித்து உச்சநீதி மன்றம் வெளியிட்ட கருத்தின் பேரில், ஆயிரத்து 563 மாணவர்களின் கருணை மதிப்பெண் மற்றும் இழப்பீட்டு மதிப்பெண் விலக்கிக் கொள்ளப் படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையே, இளங்கலை மாணவர் சேர்க்கைக்கான நீட் தேர்வில் கேள்வித் தாள் கசிந்து வெளியானதாக கூறப்படுவதை, மத்திய கல்வி அமைச்சர் திரு தர்மேந்திர பிரதான மறுத்துள்ளார். தேர்வில் மோசடி ஏதுவும் நடக்கவில்லை என்றும் அவர் கூறி உள்ளார். இன்று புதுடெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய அவர் நீட் தேர்வு பற்றிய பிரச்சனையில், உச்சநீதிமன்றத்தின் முடிவை தாம் வரவேற்பதாக தெரிவித்தார். தேர்வில் பிரச்சனை ஏற்படக் காரணமானவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் கூறினார். மாணவர்கள் மற்றும் பெற்றோர்களுக்கு நீதி வழங்க மத்திய அரசு கடமைப்பற்று கொண்டுள்ளதாக அமைச்சர் மேலும் குறிப்பிட்டார்.

நீட் மறுதேர்வு முடிவுகள், ஜூன் 30-ஆம் தேதிக்குள் வெளியிடப்படும் என்பதால், இளங்கலை மருத்துவர் மாணவர் சேர்க்கைக்கான கலந்தாய்வு நடைமுறைகளுக்கு ஏற்கனவே அறிவிக்கப்பட்ட தேதிகள் பாதிக்கப்பட மாட்டாது என்றும் தகவல் வெளியாகி உள்ளது.

<u>அருணாச்சல்</u>

மூத்த பிஜேபி தலைவர் திரு பிரேமா கண்டு அருணாச்சல பிரதேசத்தின் முதலமைச்சராக 3-ஆம் முறையாக இன்று பதவி ஏற்றுள்ளார். இட்டா நகரில் இன்று நடைபெற்ற பதவி ஏற்பு விழாவில், முதலமைச்சருடன் இதர 11 அமைச்சர்களும் பதவி ஏற்றனர். இவர்களுக்கு, அருணாச்சல் ஆளுநர் லெப்டினென்ட் ஜென்ரல் கே டி பர்நாயக், பதவிப் பிரமாணமும், ரகசிய காப்பு உறுதி மொழியும் செய்து வைத்தார். மத்திய உள்துறை அமைச்சர் திரு அமித் ஷா, சுகாதார அமைச்சர் திரு ஜேபி நட்டா, மற்றும், அசாம் மற்றும் சிக்கிம் மாநில முதலமைச்சர்களும், விழாவில் கலந்து கொண்டனர். அருணாச்சல பிரதேசத்தில் 60 உறுப்பினர் சட்ட பேரவைக்கு அண்மையில் நடைபெற்ற தேர்தலில் பிஜேபி 46 தொகுதிகளில் வெற்றி பெற்றது.

<u>வாழ்த்து</u>

அருணாச்சல பிரதேசத்தின் முதலமைச்சராக 3-ஆம் முறையாக மீண்டும் பதவி ஏற்றுள்ள திரு பேமா கண்டு-விற்கு, புதுச்சேரி முதலமைச்சர் திரு ரங்கசாமி வாழ்த்து தெரிவித்துள்ளார். பிரதமர் திரு நரேந்திர மோடி காட்டும் பாதையில் அருணாச்சல் பிரதேஷ் மாநிலமும், மக்களும் தொடர்ந்து முன்னேறுவதை திரு கண்டு தலைமையிலான நிர்வாகம் உறுதிப்படுத்தும் என்பதில் ஐயமில்லை என்று, திரு கண்டு-வின்

ஆட்சிக்காலம் மீண்டும் பொற்காலமாக அமைய தாம் வாழ்த்துவதாகவும் திரு ரங்கசாமி கூறி உள்ளார்.

<u>ஆறுதல் தொகை</u>

கடந்த ஆண்டு டிசம்பர் 31-ஆம் தேதி புதுச்சேரி பழைய துறைமுகப் பகுதியில், கடற்கரையில் விளையாடிக் கொண்டிருந்த போது கடல் அலையில் சிக்கி உயிர் இழந்த சாரம் மற்றும் எல்லைப்பிள்ளைச் சாவடியை சேர்ந்த குழந்தைகளின் குடும்பங்களுக்கு, முதலமைச்சர் திரு ரங்காசாமி இன்று, தலா 5 லட்சம் ரூபாய் கருணைத் தொகை வழங்கினார். சட்டப்பேரவையில் உள்ள முதலமைச்சர் அலுவலகத்தில் இந்நிகழ்ச்சி நடைபெற்றது.

***<u>இரங்கல்</u>***

துபாய் நாட்டில் அடுக்குமாடி குடியிருப்பில் ஏற்பட்ட பயங்கர தீவிபத்தில் 41 இந்தியர்கள் பலியானது குறித்து, புதுச்சேரி துணை நிலை ஆளுநர் திரு சிபி ராதாகிருஷ்ணன் துயரம் வெளியிட்டுள்ளார். உயிர் இழந்தவர்களின் குடும்பத்தினர் மற்றும் உறவினர்களுக்கு ஆழ்ந்த இரங்கல் தெரிவித்துக் கொள்வதாக அவர் தமது செய்தியில் கூறி உள்ளார். விபத்தில் காயம் அடைந்தவர்களுக்குத் தேவையான மருத்துவ மற்றும் இதர உதவிகளை வழங்க மத்திய வெளியுறவு அமைச்சகமும், குவைத்தில் உள்ள இந்திய தூதரகமும் மேற்கொண்டு வரும் எல்லா முயற்சிகளுக்கும் புதுச்சேரி மக்கள் சார்பில் நன்றி தெரிவித்துக் கொள்வதாகவும், காயம் அடைந்தவர்கள் விரைவில் குணம் பெற எல்லா வல்ல இறைவனை வேண்டுவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

***<u>விவசாயம்-ரங்கசாமி</u>***

புதுச்சேரி மாவட்டத்தில் உயர் ரக நெல், பாரம்பரிய நெல், கரும்பு, பருத்தி, சிறுதானிய பயிர்கள், பயறு வகைகள் மற்றும் தீவனப் புல் சாகுபடியில் ஈடுபடும் விவசாயிகளுக்கு வேளாண் துறை மூலம் உதவித் தொகை வழங்கும் பணிகளை இன்று முதலமைச்சர் திரு ரங்கசாமி தொடக்கி வைத்தார். இத்திட்டத்தின் கீழ், மொத்தம் 4 கோடியே, 36 லட்சத்து 87 ஆயிரத்து 290 ரூபாய் ஊக்குத் தொகை, மொத்தம் 5 ஆயிரத்து 416 விவசாயிகளுக்கு வழங்கப்படுகிறது. உயர்ரக நெல் மற்றும் பாரம்பரிய

நெல் சாகுபடி செய்த, பொது பிரிவு மற்றும் அட்டவணைப் பிரிவு விவசாயிகளும், விதை உற்பத்தியாளர்களும் இதில் அடங்குவர். விவசாயிகளுக்குத் தேவையான டிராக்டர், பவர்கில்லர் உள்ளிட்ட உபகரணங்களை வாங்க மானியம் வழங்கும் திட்டத்தின் கீழ் இவ்வாண்டு முதல் தவணையாக மத்திய அரசிடம் இருந்து பெறப்பட்ட 25 லட்சம் ரூபாய் நிதியில் புதுச்சேரி பிராந்தியத்தைச் சேர்ந்த 12 பயனாளிகளுக்கு, மொத்தம் 13 லட்சத்து 51 ஆயிரம் ரூபாய்க்கான தனி ஆணைகளையும், இன்று முதலமைச்சர் வழங்கினார். மாநில வேளாண் அமைச்சர் திரு ஜெயகுமார், வேளாண்துறை இயக்குநர் திரு வசந்தகுமார் உள்ளிட்டோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார்.

***<u>கம்போடியா-ரங்கசாமி</u>***

கம்போடியா நாட்டில் வேலை வாங்கித் தருவதாக கடந்த பிப்ரவரி மாதம் புதுச்சேரியில் சட்ட விரோதமாக கம்போடியாவிற்கு அழைத்துச் செல்லப்பட்ட இருவரை பத்திரமாக மீட்க அவர்களின் குடும்பத்தினர் விடுத்த வேண்டுகோளின் பேரில் முதலமைச்சர் திரு ரங்கசாமி மேற்கொண்ட நடவடிக்கையின் மூலம், இருவரும் அரசுச் செலவில் மீட்கப்பட்டதைத் தொடர்ந்து, பத்திரமாக புதுச்சேரி திரும்பி உள்ள இருவரில் ஒருவரான திரு பிரகாஷ் குமார், இன்று தமது குடும்பத்தினருடன் முதலமைச்சர் அலுவலகத்தில் முதலமைச்சர் திரு ரங்கசாமியை சந்தித்து நன்றி தெரிவித்துக் கொண்டார்.

***<u>ரங்கசாமி-காரைக்கால்</u>***

காரைக்கால் மாவட்டம் திருப்பட்டிணம் பகுதியைச் சேர்ந்த சிங்காரவேல் என்பவரின் மகன் படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து, அவரது குடும்பத்தினர் இன்று புதுச்சேரியில், முதலமைச்சர் திரு ரங்கசாமியை அவரது அலுவலகத்தில் சந்தித்து உதவி கோரினர். இதனைத் தொடர்ந்து, பாதிக்கப்பட்ட குடும்பத்திற்கு, முதலமைச்சர் நிவாரண நிதியில் இருந்து, 5 லட்சம் ரூபாய் கருணைத் தொகை வழங்க, முதலமைச்சர் திரு ரங்கசாமி உத்தரவிட்டுள்ளார். சட்டமன்ற உறுப்பினர் திரு பி ஆர் திருமுருகன் உடன் இருந்தார்.

*விஷ வாயு*

புதுச்சேரியில் ரெட்டியார் பாளையம் புதுநகர் விஷ வாயு சம்பவம் குறித்து, மாவட்ட ஆட்சியர் திரு குலோத்துங்கன் இன்று மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். சட்டமன்ற உறுப்பினர் திரு சிவசங்கரன், மற்றும், பொதுப் பணி உள்ளிட்ட பல்வேறு துறைகளின் மூத்த அதிகாரிகளும், புதுநகர், பாவாணநகர் உள்ளிட்ட பகுதிகளைச் சேர்ந்த பொது மக்களும் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர். புதுநகர் பகுதியில், பாதாள சாக்கடை அடைப்புகளை அகற்றும் பணிகளையும், கழிவுநீர் குழாய்களுக்கு காற்றோட்ட வசதி ஏற்படுத்திக் கொடுக்கும் பணிகளையும் 3 நாட்களுக்குள் முடிக்க அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார். கழிவுநீர் சுத்திகரிப்பு ஆலையில் இருந்து விஷவாயு கசிவைக் கண்டு பிடித்து, பொது மக்களை எச்சரிக்க ஏதுவாக, சென்சார் கருவிகளைப் பொறுத்தவும் அவர் அறிவுறுத்தினர். புதுநகர் பகுதி மக்களுக்கு, அருகாமை பள்ளிகளில் தங்குமிடம் மற்றும் உணவு வழங்கவும், தேவைப்பட்டால் கூடுதல் தங்குமிடங்களை திறக்கவும் உழவர்கரை நகராட்சி அதிகாரிகளுக்கு அவர் உத்தரவிட்டார். இதற்கிடையே, புதுநகர் பகுதியில் இன்று அதிகாலை, மேலும் ஒரு பெண் மயக்கமானதைத் தொடர்ந்து அவர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லப்பட்டார். அவரது உடல் நிலை சீராக உள்ளது. இதே பகுதியில் மேலும் மூவருக்கு மூச்சுத் திணறல் இருப்பதாக முகாம் சோதனையில் தெரிய வந்ததைத் தொடர்ந்து, மருத்துவர்கள் இவர்களை ஆம்புலன்ஸ் மூலம், அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

*ஒடிசா-சோதனை*

ஒடிசாவில் அஞ்சல் துறை ஆள் சேர்ப்பு பணிகளில் நடந்ததாக கூறப்படும், போலிச் சான்றிதழ் மோசடி குறித்து சிபிஐ அதிகாரிகள் இன்று பாலாசோர், பத்ரக் மையூர் பஞ்ச், ராயகடா, காலாஹண்டி உள்ளிட்ட மாவட்டங்களில், சுமார் 67 இடங்களில் அதிரடி சோதனை மேற்கொண்டனர். ஒடிசா அஞ்சல் வட்டத்தில் கடந்த ஆண்டு சுமார் ஆயிரத்து 400 கிராமப்புற அஞ்சல் சேவகர் பணியிடங்களுக்கு ஆள் எடுக்கப்பட்டதில் 63 பேர் போலிச் சான்றிதழ் கொடுத்து வேலையில் சேர்ந்து இருப்பதாக சரிபார்ப்பு பணிகளின் போது கண்டு பிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து, அஞ்சல் துறை கொடுத்த புகார் மீது, சிபிஐ கடந்த மாதம் இதுகுறித்து வழக்கு பதிவு செய்தது.

***புரி ஜெகன்னாதர்***

ஒடிசா மாநிலம் புரி ஜெகன்னாதர் கோவிலின் 4 பிரதான வாயில்களில், கொரோனா பெருந்தொற்றின் போது மூடப்பட்ட 3 வாயில்கள் இன்று முதலமைச்சர் திரு மோகன் மாஜி, முன்னிலையில், மங்களாரத்தி வைபவத்துடன், மீண்டும் திறக்கப்பட்டன. திருமதி பார்வதி பரிதா, திருமதி கனக் வர்தன் சிங் தேவ் ஆகிய 2 துணை முதலமைச்சர்களும், மாநில அமைச்சர்கள், மற்றும் பிஜேபி நிர்வாகிகள் பலரும் இதில் கலந்து கொண்டு, ஜெகன்னாதரை வழிபட்டனர். புரி ஜெகன்னாதர் கோவிலின் எல்லா வாயில்களும் திறக்கப்படும் என, ஒடிசா சட்டமன்ற தேர்தலுக்கான பாரதிய ஜனதா கட்சியின் தேர்தல் அறிக்கையில் முக்கியமாக வாக்குறுதி அளித்து இருந்தது.

***மோடி-யோகா***

10-ஆவது யோகா தினம் வரும் 21-ஆம் தேதி கொண்டாடப்படுவதை முன்னிட்டு, பிரதமர் திரு நரேந்திர மோடி இன்று தடாசனம் பற்றிய காணொளி ஒன்றை சமூக ஊடகத்தில் பகிர்ந்து கொண்டுள்ளார். தடாசனம் செய்ய வேண்டிய முறை மற்றும் அதன் பலன்கள் குறித்து காணொளியில் விளக்கப்பட்டுள்ளது. தடாசனம் உடலுக்கு மிக நல்லது என்றும், தடாசனம் செய்வதால் வலுவான, நிமிர்ந்த உடல்வாகு கிடைக்கும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார்.